


**21.03.2025**

**தலைப்பு செய்திகள்**

- **புதுதில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி** நிறுவனத்தின் 49-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.
- **விவசாயிகளின் நலனிற்கு** மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் கூறியுள்ளார்.
- **மத்திய அரசின் தொடர் முயற்சிகளால் காசநோய்** சிகிச்சை விரிவுபடுத்த பட்டிருப்பதாக மத்திய சுகாதார இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியாபட்டேல் தெரிவித்துள்ளார்.
- **தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டிற்கான** 19 ஆயிரத்து 287 கோடி ரூபாய் இறுதி துணை மதிப்பீடுகளை மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இன்று பேரவையில் தாக்கல் செய்தார்.
- **ஸ்விஸ் ஓப்பன் பேட்மிட்டன்** மகளிர் இரட்டையர் காலிறுதியில் ட்ரீஷா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை - ஹாங்காங் இணையை இன்று எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖

குடியரசு தலைவர்

புதுதில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தின் 49-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பிற்பகல் கலந்துகொள்கிறார்.

மாற்றுத்திறன் படைத்தவர்கள் பங்கேற்கும் சிறப்பு விழாவிலும் குடியரசு தலைவர் இன்று உரையாற்றவுள்ளார்.

மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கு அனைத்து வசதிகளும் கிடைக்கும் வகையில் அவர்களுக்கான திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற குடியரசு தலைவரின் தொலைநோக்கு பார்வையின் ஒருபகுதியாக Purple Fest எனப்படும் இந்நிகழ்வு நடைபெறுகிறது.

❖❖❖❖❖

**பிரதமர்**

நாட்டின் நிலக்கரி உற்பத்தி ஒரு பில்லியன் டன்னை தாண்டி சாதனை படைத்திருப்பதற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

எரிசக்தி பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, சுய சார்பு பாரதம் போன்றவற்றில் இந்தியாவின் அளப்பரிய அர்ப்பணிப்பை இந்த சாதனை புலப்படுத்துவதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நிலக்கரி பிரிவு ஊழியர்களின் கடின உழைப்பையும் இந்த சாதனை எடுத்துரைப்பதாக பிரதமர் பாராட்டினார்.

முன்னதாக மத்திய நிலக்கரி அமைச்சர் திரு.ஜி.கிஷன்ரெட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் சிறப்பான நடவடிக்கைகள் மூலம் நாட்டின் நிலக்கரி உற்பத்தி அதிகரித்துள்ளதை குறிப்பிட்டிருந்தார்.

❖❖❖❖❖

**நாடாளுமன்றம்**

**விவசாயிகளின் நலனிற்கு பிரதமர்** திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், விவசாயிகளின் பிரச்சனை குறித்து விவாதிக்க மத்திய அரசு எப்போதும் தயாராக உள்ளதாக குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதத்திற்கு எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖

**ஜீதேந்திர சிங்**

**உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி குழுவான பிராக்** நிறுவன நாள் கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக புதுதில்லி தேசிய ஊடக மையத்தில் உயிரி பொருளாதார அறிக்கையை

மத்திய அறிவியல் தொழில்நுட்பம், புவி அறிவியல் துறை அமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் இன்று வெளியிட்டார்.

உயிரி தொழில்நுட்பம், உயிரி மருந்தியல், உயிரி தொழிற்சாலை உற்பத்தி, உயிரி வேளாண்மை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய ஆய்வுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖

**காசநோய்**

காசநோய் இல்லா நாடாக விரைவில் நம் தேசம் உருவெடுக்கும் வகையில் துரித நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், 2015-வது ஆண்டோடு ஒப்பிடுகையில், 2023-ம் ஆண்டு காசநோய் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 17.7 சதவிகிதம் அளவிற்கும்

உயிரிழப்புகள் 21 சதவிகித அளவிற்கும் குறைந்திருப்பதாக எடுத்துரைத்தார்.

மத்திய அரசின் தொடர் முயற்சிகளால் காசநோய் சிகிச்சை நாடுமுழுவதும் விரிவுபடுத்த பட்டிருப்பதாக கூறியுள்ளார்

33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 347 மாவட்டங்களில் காசநோய் ஒழிப்பு பிரச்சார இயக்கம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖

**உலக காடுகள் தினம்**

**உலக காடுகள் தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது.**

காடுகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் கடைபிடிக்கப் படுகிறது.

ஆரோக்கியமான காடுகள் மற்றும் உலகளாவிய உணவு பாதுகாப்பிற்கு இடையேயான இணைப்பை முன்னெடுத்துச் செல்லும் வகையில் **காடுகளும், உணவும்** என்பதை கருப்பொருளாக கொண்டு இந்த ஆண்டு இத்தினம் கொண்டாடப்படுகிறது.

நம்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் வனப்பரப்பு 2.38 சதவிகிதம் அதிகரித்துள்ளதோடு, காட்டுத்தீ ஏற்படும் பகுதிகளும் வெகுவாக குறைந்துள்ளன.

வனப்பாதுகாப்பில் மக்களின் பங்களிப்பை ஊக்குவித்து தொலைநோக்கு கொள்கைகளை வகுத்து வரும் இந்திய நாட்டின் அணுகுமுறை உலகநாடுகளுக்கு முன்னோடியாக திகழ்கிறது

இத்தினத்தில் காடுகளையும், அதன் வளங்களையும் பாதுகாக்க நாம் உறுதியேற்பதன் அவசியத்தை வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் தர்மபுரி மாவட்டத்தில் வனப்பரப்பை அதிகரிக்கப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖

முதலமைச்சர்

**திருச்சிராப்பள்ளி மாநகரில் 290 கோடி ரூபாய்** மதிப்பீட்டில் உலக தரத்திலான மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னை தலைமை செயலத்திலிருந்து காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்

ஒருலட்சத்து 97 ஆயிரத்து 337 சதுர அடி பரப்பில் 7 தளங்களுடனும் நவீன வசதிகளுடனும் இவ்வளாகம் அமையவுள்ளது.

இந்நூலகத்தில் உலகத்தமிழ், பழந்தமிழ் நவீன இலக்கியங்கள், இலக்கணம், கலை, கவிதை, நாடக நூல்கள், நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் உள்ளிட்ட ஏராளமான பிரிவுகளில் அரிய நூல்களும் இடம்பெறவுள்ளன.

**மேலும் இந்துசமய அறநிலையத்துறையின் கீழ்** செயல்படுத்தப்படும் ஒருகால பூஜை திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 17 ஆயிரம் திருக்கோவில்களின் வைப்பு நிதியை உயர்த்திடும் வகையிலும்,

ஆயிரம் திருக்கோவில்களில் ஒருகால பூஜை மேற்கொள்ள ஏதுவாகவும், மொத்தம் 110 கோடி ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு மின்விசை மேம்பாட்டு நிறுவனத்திடம் முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖

தங்கம் தென்னரசு பதிலுரை

**தமிழ்நாட்டில் மகளிர் உரிமை, கனவு இல்லம்** போன்ற நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் நிலையிலும், வருவாய் பற்றாக்குறை குறைத்திருப்பதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் 2025-26-ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு இன்று பதிலளித்து பேசிய அமைச்சர், தமிழகத்தின் தோழியர் தங்கும் விடுதிகள், தேசிய அளவில் கவனம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த 4 ஆண்டுகளில் 42 தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளது,

மதுரையில் கலைஞர் நூலகத்தால் இதுவரை 14 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்,

கீழடியில் உள்ள அகழாய்வு அருங்காட்சியகத்தை லட்சக்கணக்கானோர் பார்வையிட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

உலக மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்க்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது,

கோடிக்கணக்கான மதிப்புள்ள ஆக்கிரமிப்பு நிலங்கள் அகற்றப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

தமிழக விளையாட்டுத்துறை பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளதாக கூறிய அமைச்சர்,

கடந்த 4 ஆண்டுகளில் விளையாட்டு துறைக்கு ஆயிரத்து 936 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

மருத்துவத்துறையில் பல புதிய திட்டங்களை முதலமைச்சர் விரைவில் அறிவிப்பார் என்றார்.

2 லட்சம் மாணாக்கருக்கு, தலா 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தரமான மடிக்கணினிகள் வழங்கப்படும் என்றும், இதற்கான கூடுதல் நிதி அடுத்த ஆண்டு ஒதுக்கப்படும் என்றும் கூறினார்.

.. வாய்ஸ் ..

**முன்னதாக 19 ஆயிரத்து 287 கோடி** ரூபாய் இறுதி துணை மதிப்பீடுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை அமைச்சர் பேரவையில் தாக்கல் செய்தார்.

❖❖❖❖❖

**எம்.ஆர்.கே பன்னீர் செல்வம்**

**தமிழ்நாட்டில் சாகுபடி பரப்பளவு அதிகரித்து உள்ளதாக** மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரயையில் வரும் நிதியாண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கான பதிலுரையில் இன்று பேசியஅவர், குறிப்பாக இருபோக சாகுபடி 33 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது என்றார்.

விவசாயிகளுக்கு நெல்கொள்முதல் ஊக்கத் தொகை வழங்க ஆயிரத்து 538 கோடி ரூபாயும் முதலமைச்சரின் மண்ணுயிர் காப்போம் திட்டத்திற்கு 146 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதனால், 21 லட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்றார்.

உழவர் நல சேவை மையம் ஆயிரம் இடங்களில் இந்தாண்டு அமைக்கப்படும்,

இந்தாண்டு இலவச மின்சாரம் வழங்க 8 ஆயிரத்து 186 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளதாகவும் கூறினார்.

இந்தாண்டு ஒரு லட்சம் பசுமைக்குடில்கள் அமைக்கப்படும் என்று கூறியஅவர், தர்மபுரி தளி பகுதியில் நறுமண ரோஜா பூ பயிரிடும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

❖❖❖❖❖

**சட்டப்பேரவை :**

**திருப்பூர் மாவட்டத்தில் சட்டக்கல்லூரி கட்டுவது** தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இன்று இதனை தெரிவித்த அவர் நிதி நிலைமைக்கேற்ப சட்டக்கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இன்று வெளியான மேலும் சில தகவல்கள் :**

**சென்னை மாநகராட்சிக்கு புதிய திருமண** மண்டபங்கள் கட்டவும், பழைய திருமண மண்டபங்களை புதுப்பிக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.K.N.நேரு தெரிவித்துள்ளார்

**தமிழகத்தில் வாடகை கட்டிடங்களில் இயங்கும்** நியாயவிலை கடைகளுக்கு சொந்த கட்டிடம் கட்டப்படும் என்று மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் கூறியுள்ளார்.

**தமிழ்நாட்டில் புதிய குடும்ப அட்டைகள் விரைவில்** வழங்கப்படும் எனவும், ஒருலட்சத்து 67 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருப்பதாகவும் மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி பேரவையில் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖

பறவைகள் வாய்ஸ்

**2025-ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த பறவைகள்** கணக்கெடுக்கும் பணி நிறைவடைந்ததை அடுத்து கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு பறவைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற கணக்கெடுப்பு பணியில் அரியவகை பறவையான மலைஇருவாச்சி கண்டறியப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

ராமதாஸ்

தமிழகத்தின் நீர் ஆதாரங்களான சதுப்பு நிலங்களை பாதுகாக்க அரசு முன்வரவேண்டும் என்று பாமக நிறுவனர் டாக்டர்.ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தவும், அதன் விளைவுகளை எதிர்கொள்ளவும் போர்க்கால அடிப்படையில் அரசு செயல்படவேண்டும் என்றார்

❖❖❖❖❖

இரங்கல்

**திருச்சி வானொலி நிலையத்தில் பொறியியல்** பிரிவில் உதவியாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற கே. தியாகராஜன் இன்று காலமானார். அன்னாருக்கு வயது 70.

❖❖❖❖❖

வானிலை

**வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தேனி** திண்டுக்கல் மதுரை விருதுநகர் தென்காசி தூத்துக்குடி ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி கோவை திருப்பூர் தேனி திண்டுக்கல் ஈரோடு கிரு‘ணகிரி தர்மபுரி தென்காசி கன்னியாகுமரி மாவட்டங்களில் நாளை கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**ஸ்விஸ் ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின் மகளிர்** இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ட்ரீஷா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை - ஹாங்காங் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**